**செ.வெ.எண்-05** **நாள்-02.12.2012**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் வாக்காளர் தாம் பதிவு செய்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT) ஆகியவைகளை முதல் நிலை சரிபார்ப்பு பணியினை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்வில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, அரியலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்கு பயன்படுத்தும் வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரம் (VVPAT) முதற்கட்ட சரிபார்க்கும் பணியானது **(First Level Checking-FLC),** இன்று 02.12.2020 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், உரிய பாதுகாப்போடு, அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இப்பணியின் போது, அரியலூர் மாவட்டத்தில் இருப்பு வைக்கப்பட்ட 797 வாக்காளர் பதிவு இயந்திரம், 787 கட்டுப்பாட்டு கருவி, 837 வாக்காளர் தாம் பதிவு செய்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை சரிபார்க்கும் பணியினை, பெங்களூர் பாரத் மின்னணு லிமிடெட் **(Bharath Electronics Limited-BEL)** நிறுவனத்தைச் சேர்ந்த 11 பொறியாளர்கள் மேற்கொண்டனர். முதற்கட்ட சரிபார்க்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) ஜெ.பாலாஜி, வட்டாட்சியர் (தேர்தல்) குமரய்யா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநதிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்**